286/2024/891

# ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்

## பிறப்பிப்பவர் : திரு.ராஜ கோபால் சுன்கரா, இ.ஆ.ப.,

ந.க.எண்.3500/2017/ப2 நாள்.19.10.2024.

பொருள்– கருணை அடிப்படையில் பணிநியமனம் – பேரூராட்சிகள் நிர்வாகம் – ஈரோடு மண்டலம் – ஈரோடு மாவட்டம் – வாணிப்புத்தூர் பேரூராட்சி – இளநிலை உதவியாளர் – நிவேதா(செல்வி)ர. – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்டது – பணியினை வரன்முறை செய்யக்கோரி அரசுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டது – மாவட்ட ஆட்சியர் அளவில் பணிவரன்முறை செய்ய தெரிவிக்கப்பட்டது – பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை–
1. ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.3500/2017/ப2 நாள் 17.02.2017.
2. அரசுக்கடித எண்.5532/மனித வளை மேலாண்மை (ஜி2) துறை, நாள்.20.09.2023.
3. அரசுக்கடித எண்.14442/பேரூ.1/2023–1 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.1) துறை. நாள்.20.10.2023.
4. சென்னை பேரூராட்சிகளின் இணை இயக்குநர்(பொ.) அவர்களின் கடிதம் ந.க.எண்.3313/2017/அ6, நாள்.01.12.2023.

-----

19/10/24

வாணிப்புத்தூர் பேரூராட்சி அலுவலகம்
19 OCT 2024
ஈரோடு மாவட்டம்

ஆணை:-

ஈரோடு மண்டலம், ஈரோடு மாவட்டம், வாணிப்புத்தூர் பேரூராட்சியில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வரும் திருமதி.ர.நிவேதா என்பவரது பணியினை வரன்முறை செய்ய பார்வை 1ல் காணும்படி ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால், கருத்துரு சென்னை பேரூராட்சிகளின் இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

"அரசுக்கடித எண்.5532/மனித வள மேலாண்மை (ஜி2) துறை, நாள்.20.09.2023ல் குறைந்த பட்ச வயது, திருமணமாகாத இறந்த அரசு ஊழியரின் திருமணமாகாத சகோதர சகோதரி தமிழ்நாடு குடிமைப்பணிகள் (கருணை அடிப்படையில் பணி நியமனம்) விதிகள் 2023ல் தளர்த்தப்பட்டுள்ள திருமதி.ர.நிவேதா என்பவர் கருணை அடிப்படையில் வாணிப்புத்தூர் பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 18.06.2015 முற்பகல் முதல் தனியரது பணியினை வரன்முறைப்படுத்தி ஆணை வெளியிட நியமன அதிகாரியை அறிவுறுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது".

அரசுக்கடித எண்.14442/பேரூ.1/2023–1 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.1) துறை, நாள்.20.10.2023.ன்படியும், பார்வை 4ல் காணும் சென்னை பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் கடிதத்தின்படியும், தனியரது பணியினை நியமன அதிகாரியான மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் வரன்முறை செய்து உரிய ஆணை பிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, ஈரோடு மண்டலம், ஈரோடு மாவட்டம், வாணிப்புத்தூர் பேரூராட்சியில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக திருமதி.ர.நிவேதா என்பவருக்கு பணியிடம் வழங்கி ஆணையிடப்பட்டதன்பேரில் தனியர் பணியேற்பு செய்த நாளான 18.06.2015 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

மேற்காணும், இளநிலை உதவியாளர் பணியினை பணிவரன்முறை செய்யப்பட்டதற்கான பதிவினை தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்து அதற்கான அறிக்கையினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்படி வாணிப்புத்தூர் பேரூராட்சி செயல்அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4/x

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
ஈரோடு மாவட்டம்.

19.10.24

பெறுநர்

1. திருமதி.ர.நிவேதா, இளநிலை உதவியாளர்,
   வாணிப்புத்தூர் பேரூராட்சி,
   ஈரோடு மாவட்டம்– (செயல்அலுவலர் மூலம்)
2. செயல்அலுவலர், வாணிப்புத்தூர் பேரூராட்சி– உரிய நடவடிக்கைக்காக.

நகல் – 1. பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை–28.
2. ப2 இருப்புக்கோப்பிற்கு.

**வாணிப்புத்தூர் பேரூராட்சி**

ந.க.எண்: 286/2024/அ நாள்: 19.10.2024

அனுப்பப்பட்டது.

(ஒ) 19/10/2024
**செயல் அலுவலர்,**
வாணிப்புத்தூர் பேரூராட்சி,
தூக்கநாயக்கன்பாளையம் - 638 506.
ஈரோடு மாவட்டம்

19/10/2024

பெறுநர்
திருமதி. ர.நிவேதா
இளநிலை உதவியாளர்,
வாணிப்புத்தூர் பேரூராட்சி,
ஈ.ரோடு மாவட்டம்.